5th November 1966]

இருக்கும். பிறர் செய்யாததை அரசாங்கம் செய்வது வேண்டத் தக்கது. ஆகவே, சர்க்கார் பெண்கள் கல்லூரிகளில் இந்த வாணிகத் துறை (காமர்ஸ்) பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேவை இருந்தால்தான் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். தேவை இருக்கிறது என்று தெரியவில்லை. போதிய மாணவிகள் முன் வருகிறார்கள் என்று தெரிந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வை. சங்கரன் : இப்போது பல பெண்கள் பள்ளிகளில் செகரடேரியல் கோர்ஸ் இருக்கிறது. அந்த கோர்ஸ் எடுத்துப் படித்த பெண்கள் கல்லூரிகளில் காமர்ஸ் பிரிவு தவிர மற்றவற்றை எடுப்பது சிரமமாக இருக்கும். அவர்கள் நேரடியாக விண்ணப்பம் கொடுக்காவிட்டாலும், பள்ளிகளில் செகரடேரியல் கோர்ஸ் இருக்கும் காரணத்தால் கல்லூரிகளில் அவசியம் அந்தப் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தப் பாடத்திட்டத்தை வைப்பதாக இருந்தாலும் போதிய மாணவர்களோ அல்லது மாணவிகளோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பது தெரிந்தாலன்றி அதற்குத் தக்க ஏற்பாடு செய்வது சரியல்ல என்று அரசாங்கம் கருதுகிறது.

கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை

* 428 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் P.U.C., B.Sc., B.Com., etc., அட்மிஷனில் ஹரிஜன மாணவர்கள் குறிப்பிட்ட சதவிகிதம் சேர்க்கப்பட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை சதவிகிதம் ?

(உ) அவ்வுத்தரவு அமுல் நடத்துவதற்கு என்ன கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) 16 per cent.

(*c*) The managements of the aided Colleges and the Principals of Government Colleges have been instructed by the Director of Higher Education to furnish particulars of the number of Scheduled Castes and Scheduled Tribes candidates who applied for admission and the number of candidates selected thereon.

[5th November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த விகிதாசாரப்படி ஹரிஜன மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளாத கல்லூரிகளின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹரிஜன மாணவர்களை இந்த விகிதாசாரப்படி சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்ற புகார் எந்தக் கல்லூரியைப் பற்றியும் வரவில்லை. அவ்வாறு மறுக்கிறார்கள் என்று தெரிந்தால் அதற்குப் பிறகு என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது என்பதைப்பற்றி அரசாங்கம் முடிவு செய்யும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இதுவரையிலும் குறிக்கப்பட்ட விகிதாசாரம் பூர்த்தியடைந்திருக்கிறதா? அந்த விவரங்களைக் கோர அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் அந்தத் தகவல்களைக் கோரி கவனித்துக்கொண்டுதான் வருகிறது என்று முன்பே கூறினேன்.

திரு. வை. சங்கரன் : சாதாரணமாக கல்லூரிகளில் ஹரிஜன மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அவர்கள் யாரிடம், எந்த அரசாங்க அதிகாரியிடம் விண்ணப்பித்து நிவாரணம் பெற இடம் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் என்னதான் விதிகள் விதித்தாலும், போதிய பக்குவம் அடையாத இத்தகைய தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இதையெல்லாம் தெரிந்து கொண்டு அவர்களாகவே தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வது சிரமமாக இருக்கும். கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டு எங்காவது அம்மாதிரி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கிறார்கள் என்று தெரிந்து உடனடியாக அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். பொதுவாக, அந்த மாணவர்களுக்கு ஸ்தானங்கள் கேட்டு மறுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

திரு. வை. சங்கரன் : இந்த மாதிரி சூழ் நிலைகள் நகரத்தில் ஏற்படுகின்றன. அதற்காக அரசாங்கம் வரை அணுகி உத்தரவு பெறுவது என்றால் காலதாமதமாகும். அந்தந்த வட்டாரங்களிலே மாவட்ட அதிகாரி யாரிடமாவது விண்ணப்பித்து நிவாரணம் பெற வழி வகுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதிகாரிகளைப் பொருத்த மட்டில் கவனம் செலுத்தி வருகிறார்கள். கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்கள் தொடர்ந்து இதிலே கவனம் செலுத்தி, அந்த நிலைமை ஏற்பட்டால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஹரிஜன மாணவர்கள் எங்காவது சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற புகார் எழுதி அனுப்பினுல் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினுர்கள். ஒவ்வொரு கல்லூரியிலும் 300 மார்க்குக்கு மேல் வாங்கியவர்கள்தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று போர்டே வைத்திருக்கிருர்கள். அரசாங்கக் கல்லூரிகளிலும் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதனுல் ஹரிஜன மாணவர்கள் விண்ணப்பிக்காமலே இருந்து விடக் கூடிய நிலைமை இருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்களுடைய பதிலை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க இவ்வளவு மார்க் எடுத்திருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருந்தால் அது தவறு என்று சொல்ல முடியுமா என்பதை ஆராய வேண்டும். இருக்கிற மாணவர்களிலே மார்க்கைப் பார்த்து சேர்த்துக் கொள்வது என்ற நிலையிலே தலையிட முடியாது என்பது இதுவரை அரசாங்கம் கொண்டிருக்கிற கருத்து. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அந்த அளவு மார்க் இல்லை என்ற காரணத்தால் சேர்த்துக் கொள்ள மறுக்கப்பட்டதாகத் தகவல் வந்தால் மேலும் கவனம் செலுத்தலாம்.

புலவர் கா. கோவிந்தன்: ஹரிஜன மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை எவ்வளவோ அந்த அளவுக்கு விண்ணப்பங்கள் வருகின்றனவா? அல்லது அதற்குக் குறைவாக விண்ணப்பங்கள் வரக்கூடிய நிலைமைதான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனிக் கேள்வி வேண்டும். எவ்வளவு ஸ்தானங்கள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு மாணவர்கள் வந்து கொண்டுதான் இருக்கிருர்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட சதவிகிதம் அளவுக்கு சேராத இடங்களில் அதை ஜெனரல் பூலில் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. அதிலே 25 சத விகிதத்தை பாக்வேர்டு கிளாஸ் மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பிற்பட்ட சமூகத்தாருக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஒதுக்கப்பட்ட அளவுக்கு அவர்களும் சேர்ந்து கொண்டுதான் இருக்கிருர்கள்.

*429 **கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அரசு நடத்தும் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு மாணவர்களை சேர்க்கும் குழுக்கள் (Committees) நியமிக்கப்பட்டனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Selection Committees for Government Training Schools and for nine Government Arts Colleges in this State have been constituted during 1966–67